Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkural1@gmail.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி




மலர் 3 | சென்னை | தினசரி | 4 பக்கம் | சனி, ஆகஸ்ட் 22, 2026 | இதழ் 131

# அன்று தொகுதி மறுவரையறை வேண்டாம் என்றீர்களே? இன்று நிலைப்பாட்டை தி.மு.க. மாற்றியது ஏன்? அமைச்சர் ஆதவ் அர்ஜூனா கேள்வி



சென்னை, 22 ஆகஸ்ட் 2026: தொகுதி மறுவரையறை விவகாரம் தொடர்பாக தமிழக சட்டசபையில் பொதுப்பணித்துறை அமைச்சர் ஆதவ் அர்ஜூனா பேசியதாவது:

நேற்று தென்மண்டல முதலமைச்சர்கள் மாநாடு நடந்தது. சில ஊடகங்கள், சில பத்திரிகைகள், சில கட்சிகள் தொகுதி மறுவரையறை பற்றி ஒரு தவறான பிரசாரத்தையும், கண்ணோட்டத்தையும் வெளிப்படுத்தியுள்ளனர். முதலமைச்சர் கொண்டு வந்த தொகுதி மறுவரையறை தீர்மானம் சட்டமன்றத்தில் இங்கு இருக்கக்கூடிய பெரும்பாலான உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது. அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அரசின் சார்பாக எங்களுடைய நன்றியை தெரிவித்தோம்.

நேற்று பரப்பப்பட்ட போலி பிரசாரங்கள் தவறானது. நம்முடைய தொகுதி மறுவரையறை கொள்கை சட்டமன்றத்தில் தீர்மானத்தில் என்ன நிறைவேற்றினோமோ அதில் அரசும் முதலமைச்சரும் உறுதியாக இருக்கிறார். தொகுதி மறுவரையறை விவகாரத்தில் 543 நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்பது தான் த.வெ.க.வின் நிலைப்பாடு. 25 ஆண்டுகள் 543 சீட் என்ற எண்ணிக்கையில் மாற்றம் செய்யக்கூடாது என்பதில் த.வெ.க. உறுதியாக இருப்பதை அவையில் தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

இதனை தொடர்ந்து எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் பேசுகையில், தென்மண்டல மாநில முதல்வர்கள் மாநாட்டில் 543 எம்பி சீட்டை மாற்றக் கூடாது என முதல்வர் எங்கும் கூறவில்லை என்பதை இந்த அவையில் தெரிவித்துக் கொள்கிறேன். 543 எம்.பி.க்கள் னுண்ணிக்கை அப்படியே இருக்க வேண்டும். தொகுதி மறுவரையறை நடந்தால் தமிழ்நாட்டின் பிரதிநிதித்துவ விகிதாச்சாரம் குறையக்கூடாது என்று கூறினார்.

தொடர்ந்து அமைச்சர் ஆதவ் அர்ஜூனா பேசுகையில், அனைத்து கட்சிகளின் நிலைப்பாடு என்னவோ அது தான் தவெக அரசின் நிலைப்பாடு என்றார்.

இதையடுத்து பேசிய எடப்பாடி பழனிசாமி, 7.18 என்ற விகிதத்தில் தமிழகத்திற்கான எம்பிக்கள் எண்ணிக்கையில் மாற்றம் கூடாது என்பதே அதிமுக நிலைப்பாடு என்றார்.

அமைச்சர் ஆதவ் அர்ஜூனா பேசுகையில், தி.மு.க.வின் நிலைப்பாடு மாறுவதாக உள்ளது. நமது குறிக்கோள் 7.18 இருக்க வேண்டும். வாஜ்பாய் பிரதமராக இருந்த போது 7.18 சதவீதம் 25 ஆண்டுகளும் இருக்கும் என்று திட்டம் கொண்டு வரப்பட்டார். தி.மு.க. 50% கொடுத்தாலும் வேண்டாம் என்று கூறினார்கள். தொகுதி மறுவரையறை வேண்டாம் என்று நகலை எதிர்த்த திமுக, எதிர்க்கட்சியாக மாறிவிட்டதால் நிலைப்பாட்டை மாற்றியுள்ளது என்றார்.

# அடுத்த கட்டமைப்புத் திட்டம்: 'பிரிக்ஸ்' அறிவியல், தொழில்நுட்ப அமைச்சக உயர் அதிகாரிகள் கூட்டம்



சென்னை, 22 ஆகஸ்ட் 2026: 'பிரிக்ஸ்' அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் (எஸ்டிஐ) தொடர்பான 16- வது மூத்த அதிகாரிகள் கூட்டம் சென்னையில் இரண்டு நாட்கள் நடைபெற்ற ஆலோசனைகளுக்குப் பிறகு நேற்று நிறைவடைந்தது.

இதையடுத்து, 14- வது பிரிக்ஸ் தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் அமைச்சர்கள் கூட்டம் இன்று நடைபெற்றது.

இந்தக் கூட்டத்துக்கு மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், புவி அறிவியல் துறை இணை அமைச்சர் (தனிப் பொறுப்பு), பிரதமர் அலுவலக இணை அமைச்சர், பணியாளர் நலன், பொதுமக்கள் குறைதீர், ஓய்வூதியம், அணுசக்தி மற்றும் விண்வெளித் துறை இணை அமைச்சரான டாக்டர் ஜிதேந்திர சிங் தலைமை வகித்தார்.

இந்தியாவின் 2026-ம் ஆண்டு பிரிக்ஸ் தலைமைப் பொறுப்பின் கீழ் "மீள்திறன், புத்தாக்கம், ஒத்துழைப்பு மற்றும் நிலைத்தன்மைக்கான கட்டமைப்பை உருவாக்குதல்" என்ற கருப்பொருளில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை (டிஎஸ்டி) ஒருங்கிணைப்பில், சென்னை ஐஐடி ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பிரிக்ஸ் உறுப்பு நாடுகளின் மூத்த அதிகாரிகள் மற்றும் பிரதிநிதிகள் பங்கேற்றனர். டிஎஸ்டி சர்வதேச ஒத்துழைப்புப் பிரிவின் தலைவர் டாக்டர் பிரவீன்குமார் சோம சுந்தரம் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார். 'பிரிக்ஸ்' - எஸ்டிஐ ஒருங்கிணைப்பாளர் டாக்டர் அரிந்தம் பட்டாச்சார்யா, பிரிக்ஸ் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க நடவடிக்கைகள் தொடர்பான முன்னேற்றங்களை எடுத்துரைத்தார்.

முன்னதாக, இரண்டு நாட்கள் நடைபெற்ற கூட்டத்தில் 'பிரிக்ஸ்' - எஸ்டிஐ பணிக்குழுக்களின் செயல்பாடுகள், உறுப்பு நாடுகளின் முன்னுரிமைப் பகுதிகள் மற்றும் முன்மொழிவுகள், அறிவியல்- தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத்துக்கான முன்னுரிமைகள் ஆகியவை குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

மேலும், 'பிரிக்ஸ்' - எஸ்டிஐ கட்டமைப்புத் திட்டம் மற்றும் அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. பிரிக்ஸ் இளம் விஞ்ஞானிகள் மன்றம், இளம் புத்தாக்குநர் விருது உள்ளிட்ட புதிய முயற்சிகளும் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன.

அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத் துறைகளில் பிரிக்ஸ் நாடுகளுக்கு இடையிலான ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கான அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்கு இந்த ஆலோசனைகள் அடித்தளமிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# விண்வெளிப் புத்தொழில் நிறுவனங்களின் தலைமைச் செயல் அதிகாரிகளுடன் பிரதமர் கலந்துரையாடினார்

சென்னை 22, ஆகஸ்ட் 2026: பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று (21.08.2026) சேவா தீர்த்தில் 20 விண்வெளிப் புத்தொழில் நிறுவனங்களின் தலைமைச் செயல் அதிகாரிகள், நிறுவனர்களுடன் கலந்துரையாடினார்.

ராக்கெட்டுகளை உருவாக்குதல், மறுபயன்பாட்டு அரை-குளிர்நிலை ஏவுகணைகளை உருவாக்குதல், வானூர்தி மின்னணுவியல், செயற்கைக் கோள்கள், மேம்பட்ட உந்துவிசை அமைப்பு, விண்வெளி, பாதுகாப்பு உளவுத்துறை, விண்வெளிக் குப்பைகளை அகற்றுதல் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் பணியாற்றும் விண்வெளித் துறையின் முன்னணி நிறுவனங்களின் தலைமைச் செயல் அதிகாரிகள் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர். இந்தியாவின் விண்வெளித் துறை அடைந்து வரும் விரைவான முன்னேற்றத்தை அவர்கள் எடுத்துரைத்ததோடு, இத்துறையின் எதிர்காலம் குறித்த தங்களின் தொலைநோக்குப் பார்வையையும் பகிர்ந்துகொண்டனர். தங்களின் திறன்களையும் தேவையான தொழில்நுட்பங்களையும் உள்நாட்டிலேயே உருவாக்குவதில் கணிசமான நேரத்தையும் முயற்சியையும் செலவிட்டுள்ளதாக அவர்கள் பகிர்ந்துகொண்டதோடு, பிரதமரிடமிருந்து கிடைத்த ஆதரவிற்கு நன்றியையும் தெரிவித்தனர்.

மேலும், அரசின் வலுவான ஆதரவையும், தொழில்துறைக்குள் நிலவும் நல்ல ஒத்துழைப்பையும் அவர்கள் எடுத்துரைத்ததோடு, விண்வெளித் துறையில் லட்சிய இலக்குகளை அடைவதற்காக ஊக்கத்துடனும் உறுதியுடனும் செயல்பட்டு வருவதாகக் குறிப்பிட்டனர்.

விண்வெளித் துறையைத் தனியார் பங்கேற்புக்குத் அனுமதித்ததன் மூலம் இந்தத் தொழில்துறைக்குப் புதிய வாய்ப்புகள் உருவாகியுள்ளன என்பதை அவர்கள் நினைவு கூர்ந்தனர். ஒரு புதிய துறையில் துணிச்சலுடன் முன்னின்று வழிநடத்தும் விண்வெளித் துறைத் தலைவர்களுக்குப் பிரதமர் வாழ்த்துத் தெரிவித்தார். இத்துறையில் நிலவும் நம்பிக்கை, தொலைநோக்குப் பார்வையை வலுப்படுத்தியுள்ளது என்று அவர் கூறினார். பல நாடுகள் விண் வெளித் துறையில் முதலீடு செய்ய இயலவில்லை அல்லது முதலீடு செய்ய விரும்பவில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

ஆனால் உலகளாவிய விண் வெளித் துறையில் இந்தியா தனது நிலையை விரைவாக வலுப்படுத்திக் கொள்கிறது என்று அவர் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில், ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ், அக்னிகுல் காஸ்மோஸ், பிக்சல், துருவா ஸ்பேஸ், கேலக்ஸ்ஐ, பியர்சைட், பெல்லாட்ரிக்ஸ் ஏரோஸ்பேஸ், டிகந்தரா, சாட்சூர், சுஹோரா டெக்னாலஜிஸ் உள்ளிட்ட விண்வெளித் துறையில் செயல்படும் 20 புத்தொழில் நிறுவனங்களின் தலைமைச் செயல் அதிகாரிகள் மற்றும் நிறுவனர்கள் பங்கேற்றனர்.

# "ஓப்பன் சேலஞ்ச்" தான் பண்றேன்.. ஃபைல்களை திறங்க... முதல்வரை அதிர வைத்த எதிர்க்கட்சித் தலைவர்



சென்னை 22, ஆகஸ்ட் 2026: தமிழக சட்டப்பேரவையில் 2 நாட்களுக்கு முன் எதிர்க்கட்சியினர் ஆதாரம் கேட்டு கேள்வி போது, மூன்று துறைகளின் ஆய்வு கோப்புகள் தனது மேசையில் ஆதாரத்துடன் இருப்பதாக முதலமைச்சர் விஜய் தெரிவித்தார். மேலும் அந்த கோப்புகளை இப்போது திறக்க வேண்டாம் என்று நினைத்திருப்பதாகவும், சரியான நேரத்தில் உரிய ஆதாரங்களுடன் வெளியிடப்படும் என்றும் எச்சரிக்கும் தொனியில் பேசினார்.

இதற்கு இன்று பதிலடி அளித்துள்ள எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின், 2 நாட்களுக்கு முன் பேரவையில் முதல்வர் பேசும்போது தன்னுடைய டேபிளில் 3 கோப்புகள் இருப்பதாக சொன்னார். அதை திறக்க வைத்துவிடாதீர்கள் என்றார். முதல்வர் அந்த கோப்புகளை திறந்து பார்த்து நடவடிக்கை எடுக்க வேண்டும்; எதற்காக பயம்..? இதையே 3 மாதமாக சொல்லி கொண்டு இருக்கிறீர்கள்; ஜோசியக்காரர் சொன்னால் தான் திறந்து பார்ப்பீர்களா.! என்று கேள்வி எழுப்பினார்.

சில நிமிட பிற உறுப்பினர்களின் அவை பேச்சுக்கு பின் மீண்டும் இந்த தலைப்பை எடுத்து பேசிய உதயநிதி ஸ்டாலின், முதல்வர் 3 ஃபைல்கள் என் டேபிள் மீது இருக்கிறது என்று சொன்னாரே.!! நான் வெறுமனே சவால் விடவில்லை, முதல்வருக்கு நான் பகிரங்க சவால் விடுகிறேன். முதல்வர் அந்த ஃபைல்களை திறந்து பார்க்கட்டும். உண்மையான குற்றச்சாட்டு ஆதாரத்தோடு யார் மீது இருந்தாலும் தாராளமாக நடவடிக்கை எடுக்கட்டும். சினிமாவில் பேசுவது போல சட்டமன்றத்தில் பஞ்ச் டயலாக் பேசுவதெல்லாம் சரி வராது.. திமுக எப்போதும் யாருடைய உருட்டல், மிரட்டலுக்கெல்லாம் அஞ்சாது என்று உதயநிதி பேசினார்.



# கேரளாவின் புகழ்பெற்ற அறுவடைத் திருநாளான ஓணத்தை 'ஓணசத்யா' விருந்துடன் கொண்டாடுங்கள்



சென்னை, 22 ஆகஸ்ட் 2026: கேரளாவின் புகழ்பெற்ற புராண மன்னரான மகாபலியின் வருகையை இந்த ஆண்டு உற்சாகத்துடனும் விருந்துடனும் கொண்டாடுங்கள். பாரம்பரிய 'ஓணசத்யா' இல்லாமல் ஓணக் கொண்டாட்டங்கள் முழுமையடையாது. இந்த அறுவடைப் பருவத்தில், விருது பெற்ற கேரள சிறப்பு உணவகமான 'கப்பா சக்கா கந்தாரி' (சென்னை), உங்களுக்காக ஒரு பிரம்மாண்டமான பாரம்பரிய ஓணசத்யா விருந்தை வழங்குகிறது. உணவகத்தில் அமர்ந்து உண்பதற்கான (டைன்-இன்) இந்தச் சிறப்பு ஓணசத்யா விருந்தில், கேரளாவைச் சேர்ந்த சமையல்காரர்களால் தயாரிக்கப்பட்ட 25 வகையான பாரம்பரிய சைவ உணவுகள் இடம் பெற்றுள்ளன. இது சென்னை மற்றும் பெங்களூருவில் உள்ள 'கப்பா சக்கா கந்தாரி' கிளைகளில் ஆகஸ்ட் 25 மற்றும் 26, 2026 ஆகிய தேதிகளில் மதிய உணவாக மட்டுமே வழங்கப்படும். மேலும், நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் வீட்டிலேயே இந்தத் திருநாளைக் கொண்டாட, 5-6 நபர்களுக்கான முழுமையான உணவை உள்ளடக்கிய 'ஓணசத்யா பாக்ஸ்' மற்றும் பாரம்பரிய ஓணச் சிறப்பு பாயச வகைகள் ஆகியவை 'டேக்-அவே' வசதியுடன் ஆகஸ்ட் 25 மற்றும் 26 தேதிகளில் கிடைக்கின்றன. ஓணசத்யா விருந்திற்கான முன்பதிவு அல்லது சிறப்பு 'டேக்-அவே' உணவுகளை முன்பதிவு செய்ய, எங்கள் இணையதளமான www.kappachakkakandhari.com- பயன்படுத்தவும்.

ஓணசத்யா - அறுவடைப் பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்படும் ஒரு பிரம்மாண்டமான பல வகை சைவ விருந்து - ஒவ்வொரு மலையாளியின் பெருமையாகும். கேரளாவைச் சேர்ந்த சிறப்பு சமையல்காரர்கள் ஒரு மன்னருக்கு ஏற்ற வகையில் இந்த விருந்தைச் சிறப்பாகத் தயாரிக்கின்றனர். இந்த ஆண்டு, ஓணசத்யா விருந்து 25 வகையான பாரம்பரிய உணவுகளைக் கொண்ட 'தாலி' முறையாகப் பரிமாறப்படும். செரு பழம், நேந்திரக்காய் நுருக்கு, சர்க்கரை வரட்டியது, பாகற்காய் கொண்டாட்டம் மற்றும் பயறு கொண்டாட்டம் ஆகியவற்றுடன் விருந்து தொடங்கும். எங்கள் ஊறுகாய் வகைகளில் மாங்காய் ஊறுகாய், எலுமிச்சை ஊறுகாய், நெல்லிக்காய் ஊறுகாய் மற்றும் மிகவும் பிரபலமான இஞ்சி புளி ஆகியவற்றுடன் பீட்ரூட் கிச்சடி மற்றும் அன்னாசி பச்சடி ஆகியவை இடம் பெற்றுள்ளன. விருந்தில் இடம்பெறும் காய்கறி உணவுகளில் ஓலன், முட்டைக்கோஸ் தோரன், அவியல் மற்றும் கூட்டுக்கறி ஆகியவை அடங்கும். சுவையான சாம்பார், கலன், பப்படம் மற்றும் ரசம் ஆகியவற்றுடன் மத்தா சிவப்பு சாதத்துடன் நெய்-பரிப்பு மகிழுங்கள். சுவையான பலாடா பாயசம், அட பிரதமன், பயறு பாயசம் & சக்க பிரதமன் இல்லாமல் விரிவான ஓணசத்யா விருந்து முழுமையடையாது. பெரியவர்களுக்கு தலைக்கு ரூ. 1980 (வரிகள் உட்பட) மற்றும் குழந்தைகளுக்கு ரூ. 1180 (வரிகள் உட்பட) விலையில், ஓனசத்யா ஆகஸ்ட் 25-26, 2026 அன்று மதிய உணவிற்கு வெவ்வேறு நேர இடைவெளிகளில் கிடைக்கும்: சென்னை: கப்பா சக்க காந்தாரி, எண்.10, ஹடடோவ்ஸ் சாலை. சென்னை-600006. Ph: +91 98585 91010.

# 717 டாஸ்மாக் கடைகள் மூடல் வருவாய் இழப்பை சமாளிக்க இடம் மாற்றமா? பொதுமக்கள் பாதுகாப்பு என கூறிவிட்டு அதிக விற்பனை கடைகளுக்கு குறி: தமிழக அரசின் இரட்டை நிலைப்பாட்டால் சர்ச்சை




சென்னை 22, ஆகஸ்ட் 2026: பள்ளி, கல்லூரிகள், வழிபாட்டுத் தலங்கள், பேருந்து மற்றும் ரயில் நிலையங்கள் உள்ளிட்ட பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களின் அருகே செயல்பட்டு வந்த 717 டாஸ்மாக் மதுக்கடைகளை மூடிய தமிழக அரசு, தற்போது அவற்றில் அதிக விற்பனை நடைபெற்ற முக்கியமான கடைகளை வேறு இடங்களுக்கு மாற்றுவது குறித்து ஆலோசித்து வருவது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் அளிப்பதாக கூறி, பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் இருந்து 500 மீட்டர் தூரத்துக்குள் செயல்படும் மதுக்கடைகளை மூட முதலமைச்சர் விஜய் உத்தரவிட்டதாக தெரிவிக்கப்பட்டது. இதன்படி விதிகளை மீறி செயல்பட்டதாக கூறப்பட்ட 717 மதுக் கடைகள் மூடப்பட்டன. இதனால் அரசுக்கு சுமார் ரூ.11 ஆயிரம் கோடி வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

ஆனால், கடைகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டதால் அருகில் உள்ள டாஸ்மாக் கடைகளில் கூட்டம் அதிகரித்து பொதுமக்களுக்கு சிரமம் ஏற்படுவதாக தற்போது அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் மூடப்பட்ட 717 கடைகளில் அதிக விற்பனை நடைபெற்ற முக்கியமான கடைகளை இடமாற்றம் செய்வதே சிறந்த தீர்வு என அமைச்சர் விக்னேஷ் கூறியிருப்பது, அரசு எடுத்த நடவடிக்கையின் நோக்கம் குறித்த கேள்வியை எழுப்பியுள்ளது. பொதுமக்கள் பாதுகாப்பு, பெண்களின் பாதுகாப்பு ஆகியவற்றை காரணம் காட்டி மதுக்கடைகள் மூடப்பட்ட நிலையில், அதிக விற்பனை நடைபெறும் கடைகளை மட்டும் வேறு இடங்களில் மீண்டும் செயல்படுத்தும் முயற்சி ஏன் என்ற கேள்வியை சமூக ஆர்வலர்கள் எழுப்பியுள்ளனர்.

நீண்ட காலமாக தொடரும் இந்த பிரச்சினையை முழுமையாக தடுக்க முடியாமல் இருப்பது குறித்தும், பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களின் அருகே மதுக்கடைகள் செயல்படக் கூடாது என அறிவித்து 717 கடைகளை மூடிய அரசு, வருவாய் இழப்பு மற்றும் அருகேயுள்ள கடைகளில் கூட்டம் அதிகரிப்பு ஆகிய காரணங்களை முன்வைத்து மீண்டும் கடைகளை இடமாற்றம் செய்யும் முடிவுக்கு செல்வது, பொதுநலனா வருவாய் நோக்கமா என்ற கேள்வியை பொதுமக்கள் மத்தியில் எழுப்பியுள்ளது. இதற்கிடையே, மூடப்பட்ட 717 டாஸ்மாக் கடைகளின் முழுமையான பட்டியலையும் நேற்று தமிழக அரசு வெளியிட்டு உள்ளது.

# முதன்மை இடத்தைப் பிடிக்கத் தயாராகும் இந்திய ஜூனியர் சர்வதேச தொடர் 2026

சென்னை 22, ஆகஸ்ட் 2026: கோட்டக் மஹிந்திரா பேங்க் (கேஎம்பிஎல்) இன்று பேட்மின்டன் வேர்ல்டு ஃபெடெரேஷன் (பிடபிள்யு எஃப்) அங்கீகாரம் பெற்ற ஜூனியர் தொடரான இந்தியா ஜூனியர் இண்டர்நேஷ்னல் சீரிஸ் 2026-ன் தொடக்கத்தை அறிவித்துள்ளது. இந்த தொடர் ஆகஸ்ட் 19 முதல் 23, 2026 வரை கோட்டக் புல்லேலா கோபிசந்த் பேட்மின்டன் அகாடமி-யில் நடைபெறுகிறது.

இந்தியாவில் விளையாட்டு திறமைகளை வளர்ப்பதற்கான கோட்டக் மஹிந்திரா பேங்க்-ன் நீண்டகால அர்ப்பணிப்பின் ஒரு பகுதியாக இந்த தொடர் அமைகிறது. புல்லேலா கோபிசந்த் பேட்மின்டன் ஃபவுண்டேஷன் உடனான கூட்டுறவின் மூலம், நிபுணத்துவ கோச்சிங், உயர்தர இன்ஃப்ராஸ்ட்ரக்சர் மற்றும் போட்டி அனுபவங்கள் வாயிலாக இளம் பேட்மிண்டன் திறமைகளைக் கண்டறிந்து மேம்படுத்துவதில் கவனம் செலுத்தும் உலகத் தரம் வாய்ந்த நிறுவனமான கோட்டக் புல்லேலா கோபிசந்த் பேட்மின்டன் அகாடமி-யை உருவாக்க கோட்டக் ஆதரவளித்துள்ளது.

சர்வதேச ஜூனியர் பேட்மிண்டன் காலண்டரில் ஒரு முக்கியமான போட்டியான இந்தியா ஜூனியர் இண்டர்நேஷ்னல் சீரிஸ் 2026, இளம் விளையாட்டு வீரர்களுக்கு உலகெங்கிலும் உள்ள முன்னணி ஜூனியர் திறமைகளுடன் போட்டியிடவும், மதிப்புமிக்க பிடபிள்யு எஃப் தரவரிசைப் புள்ளிகளைப் பெறவும் ஒரு வாய்ப்பை வழங்கும். பல நாடுகளைச் சேர்ந்த வீரர்களை ஒன்று சேர்ப்பதன் மூலம், இந்த தொடர் விளையாட்டுத்தன்மை, சர்வதேச நட்பு மற்றும் கலாச்சார பரிமாற்றத்தையும் ஊக்குவிக்கும். வளர்ந்து வரும் இந்திய ஷட்லர்களுக்கு, அவர்களின் வளர்ச்சியின் முக்கியமான கட்டத்தில் இது சர்வதேச போட்டி அனுபவத்தை வழங்கும்.

விளையாட்டு உள்கட்டமைப்பு, விளையாட்டு வீரர்களின் வளர்ச்சி மற்றும் போட்டி வாய்ப்புகளில் தொடர்ச்சியான முதலீடுகள் மூலம், திறமையான விளையாட்டு வீரர்களுக்கு ஆதரவளிக்கவும், இந்தியாவின் பேட்மிண்டன் அமைப்பை வலுப்படுத்தவும், விளையாட்டின் மூலம் உள்ளடக்கிய வளர்ச்சி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் அதன் பரந்த சிஎஸ்ஆர் தொலைநோக்குப் பார்வையை முன்னோக்கி கொண்டு செல்லவும் கோட்டக் நோக்கம் கொண்டுள்ளது.

ஹைதராபாத்-ல் உள்ள அகாடமியில் இந்த தொடர் தொடர்ந்து நடத்தப்படுவது, பேட்மிண்டனுக்கான முன்னணி மையமாக இந்த நகரத்தின் இடத்தை மேலும் வலுப்படுத்துகிறது. இது தெலங்கானா மற்றும் அதைச் சுற்றியுள்ள மாநிலங்களைச் சேர்ந்த வீரர்களுக்குத் தங்கள் சொந்த பகுதிக்கு அருகிலேயே சர்வதேச போட்டியை அனுபவிக்கும் வாய்ப்பை வழங்குகிறது, இது விளையாட்டில் பரவலான பங்கேற்பையும் அதிக விருப்பங்களையும் ஊக்குவிக்கிறது.

இந்த நிகழ்வில் பேசிய கோட்டக் மஹிந்திரா பேங்க்-ன் சிஎஸ்ஆர் & இஎஸ்ஜி பிரிவின் இஎஸ்ஜி தலைவர் ஹிமான்ஷு அவர்கள், "கோட்டக் புல்லேலா கோபிசந்த் பேட்மின்டன் அகாடமி பல ஆண்டுகளாக இளம் பேட்மிண்டன் திறமைகளை வளர்ப்பதில் முக்கிய பங்கு வகித்துள்ளது.

வளர்ந்து வரும் விளையாட்டு வீரர்கள் கற்றுக்கொள்ளவும், வளரவும், அவர்களின் திறனை உணரவும் உதவும் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதில் நாங்கள் பெருமைப்படுகிறோம்.

இந்தியா ஜூனியர் இண்டர்நேஷ்னல் சீரிஸ் இளம் வீரர்களுக்கு சர்வதேச அளவில் போட்டியிடவும், அவர்களின் விளையாட்டு பயணத்தின் தொடக்கத்திலேயே மதிப்புமிக்க அனுபவத்தைப் பெறவும் ஒரு வாய்ப்பை வழங்குகிறது.

இந்த தொடர் அடுத்த தலைமுறை பேட்மிண்டன் வீரர்களைத் தொடர்ந்து ஊக்குவிக்கும் என்றும், இந்தியாவில் விளையாட்டின் வளர்ச்சிக்கு பங்களிக்கும் என்றும் நாங்கள் நம்புகிறோம்" என்று கூறினார்.

# சோமாலிய கடற்கொள்ளையர்களால் 6 இந்திய மாலுமிகள் உட்பட 10 பேர் கடத்தல்: துருக்கி சரக்கு கப்பல் சிறைபிடிப்பு

சென்னை 22, ஆகஸ்ட் 2026: சோமாலியா அருகே துருக்கி நாட்டின் ராணுவ தளவாடங்களை ஏற்றிச் சென்ற சரக்குக் கப்பலை 6 இந்திய மாலுமிகளுடன் கடற்கொள்ளையர்கள் அதிரடியாகக் கடத்திச் சென்ற சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. சோமாலிய கடற்பகுதியில் சர்வதேச வணிகக் கப்பல்களைக் குறிவைத்து கடற்கொள்ளையர்கள் தொடர்ந்து அச்சுறுத்தல் ஏற்படுத்தி வரும் நிலையில், கடந்த ஏப்ரல் 26ம் தேதி 'ஸ்வார்ட்' என்ற வணிகக் கப்பலைக் கடத்திய அதே 8 பேர் கொண்ட கடற்கொள்ளையர் கும்பல், தற்போது கேமரூன் நாட்டின் கொடியுடன் இயங்கி வந்த 'லுதுப்' என்ற சரக்குக் கப்பலை புண்ட்லாந்தின் மாராயா கடற்பகுதியில் 3.5 கடல் மைல் தொலைவில் வைத்து சிறைபிடித்துள்ளது.

மொகடிஷுவில் உள்ள துருக்கி ராணுவ பயிற்சி மையத்திற்குத் தேவையான நவீன துப்பாக்கிகள் உள்ளிட்ட ஆயுதங்கள், செயற்கைக்கோள் மற்றும் தொலைத்தொடர்பு உபகரணங்களை ஏற்றிச் சென்ற போலார் மூவ்மென்ட் ஷிப்பிங் நிறுவனத்திற்குச் சொந்தமான இந்தக் கப்பலில் 6 இந்திய மாலுமிகள், துருக்கியைச் சேர்ந்த ஒருவர், ஜார்ஜியாவைச் சேர்ந்த ஒருவர் மற்றும் 2 செர்பிய நாட்டுப் பாதுகாப்புப் படை வீரர்கள் என மொத்தம் 10 பேர் பிணைக்கைதிகளாகப் பிடித்துச் செல்லப்பட்டுள்ளனர்;

இதற்கிடையே துருக்கி நாட்டின் ஹெலிகாப்டர்கள் மற்றும் ட்ரோன்கள் அப்பகுதியை தீவிரமாகக் கண்காணித்து வரும் வேளையில், கொள்ளையர்களுக்கு போதைப்பொருள் சப்ளை செய்த படகின் மீது நடத்தப்பட்ட திடீர் வான்வழித் தாக்குதலில் 4 பேர் பலியானதாகவும், 2 பேர் காயமடைந்ததாகவும் தகவல்கள் வெளியாகியுள்ள போதிலும், சிறைபிடிக்கப்பட்ட இந்தியர்கள் உள்ளிட்ட 10 மாலுமிகளைப் பாதுகாப்பாக மீட்பது குறித்து இந்திய மற்றும் துருக்கி நாட்டு அதிகாரிகள் தரப்பில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# நிர்மலா சீதாராமன் தலைமையிலான மத்திய குழு சிங்கப்பூர் பிரதமர் லாரன்ஸ் வோங்குடன் சந்திப்பு



சென்னை 22, ஆகஸ்ட் 2026: இந்தியா - சிங்கப்பூர் மந்திரிகள் பங்கேற்கும் 4வது வட்ட மேஜை மாநாடு சிங்கப்பூரில் நேற்று நடந்தது. இதில் பங்கேற்பதற்காக மத்திய அமைச்சர்கள் குழு ஒன்று நேற்று முன்தினம் புறப்பட்டு சென்றது.

நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் தலைமையிலான இந்த குழுவில் வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர், வர்த்தக அமைச்சர் பியூஸ் கோயல், எலக்ட்ரானிக்ஸ் மற்றும் தகவல் தொழில் நுட்பத்துறை இணை அமைச்சர் ஜிதின் பிரசாதா ஆகியோர் இடம் பெற்று உள்ளனர். வட்ட மேஜை மாநாடு தொடங்குவதற்கு முன்னதாக, மத்திய அமைச்சர்கள் குழுவை அந்த நாட்டு பிரதமர் லாரன்ஸ் வாங் சந்தித்து பேசினார்.

அப்போது வட்ட மேஜை மாநாடு மூலமாக இரு நாடுகளும் எவ்வாறு சிறந்த வளர்ச்சியை உருவாக்குவது, ஒருங்கிணைந்த மூலோபாய ஒத்துழைப்பை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்வது குறித்து விவாதிக்கப் பட்டது.

முக்கியமாக, உற்பத்தி, டிஜிட்டல் மயமாக்கல், நிலைத்தன்மை மற்றும் இணைப்பு உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து இந்திய மந்திரிகளுடன் சிங்கப்பூர் பிரதமர் விவாதித்தார். மேலும் பிராந்திய மற்றும் சர்வதேச நிகழ்வுகள் குறித்தும் அவர்கள் கலந்துரையாடினர். பின்னர் இந்த சந்திப்பு குறித்து அவர் தனது சமூக வலைத்தளத்தில் மகிழ்ச்சி வெளியிட்டு இருந்தார்.

அதில் அவர், 'நிர்மலா சீதாராமன், ஜெய்சங்கர், பியூஸ் கோயல் மற்றும் பிரசாதா ஆகியோரை வட்ட மேஜை மாநாட்டுக்கு முன்னர் சந்தித்ததில் மகிழ்ச்சி.

சிங்கப்பூரும், இந்தியாவும் நீண்டகால மற்றும் மேலும் மேலும் நெருக்கமான ஒரு கூட்டாண்மையைப் பகிர்ந்து கொள்கிறோம். வட்ட மேஜை மாநாட்டில் மந்திரிகள் ஒரு ஆக்கப்பூர்வமான மற்றும் இனிமையான விவாதங்களை நடத்த வாழ்த்துகிறேன்' என குறிப்பிட்டு இருந்தார்.

இரு நாட்டு அமைச்சர்களின் வட்டமேஜை மாநாட்டில் சிங்கப்பூர் சார்பில் அந்த நாட்டு உள்துறை அமைச்சர் சண்முகம், வெளியுறவு அமைச்சர் விவியன் பாலகிருஷ்ணன், டிஜிட்டல் மேம்பாட்டுத்துறை அமைச்சர் ஜோசப்பின் தியோ, போக்குவரத்து அமைச்சர் ஜெப்ரி சியோவ் பங்கேற்கின்றனர். இந்த குழுவுக்கு அந்த நாட்டு துணை பிரதமரும், வர்த்தக அமைச்சருமான கான் கிம் யாங் தலைமை தாங்குகிறார்.

இந்தியா - சிங்கப்பூர் இடையேயான இந்த 4வது அமைச்சர்கள் வட்ட மேஜை மாநாட்டில், முந்தைய 3வது மாநாட்டு முடிவுகளின் செயல்பாட்டு நிலவரம் குறித்து ஆய்வு செய்யப் படுகிறது.

அத்துடன் சிங்கப்பூர் - இந்தியா விரிவான மூலோபாய கூட்டாண்மை செயல்திட்டத்தின் செயலாக்கத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான புதிய வாய்ப்புகளை அடையாளம் காணுதல் உள்பட பல்வேறு அம்சங்கள் குறித்து விவாதிக்கப் படும் என்று இருநாடுகளும் கூட்டாக வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.

# "நடிகர் கவுண்டமணிதான் இன்ஸ்பிரேஷன்" ...நடிகர் அப்துல் லீ!



சென்னை, 22 ஆகஸ்ட் 2026: 'மொத ராத்திரி' திரைப் படத்தில் கண்ணன் என்ற கதாபாத்திரத்தில் கலக்கியவர் நடிகர் அப்துல் லீ. இரண்டு பழம்பெரும் ஆளுமைகளான ஸ்டான் லீ மற்றும் ஸ்பைக் லீ ஆகியோரின் பெயர்களால் ஈர்க்கப்பட்டு, தனது பெயரில் 'லீ என்பதை இணைத்துக் கொண்டார். யூடியூப் ஸ்கெட்ச் வீடியோக்கள் மூலம் நடிப்புத் துறையில் தனது பயணத்தைத் தொடங்கியவர் அப்துல் லீ. இங்கு தனது காமெடி டைமிங் மற்றும் நடிப்புத் திறமையை வெளிப் படுத்தும் வாய்ப்பைப் பெற்றார்.

திரைத்துறையில் பழம்பெரும் நகைச் சுவை நடிகர்களான கவுண்டமணி மற்றும் பாலையா ஆகியோரை தனது இன்ஸ்பிரேஷன் என்கிறார் அப்துல் லீ. நகைச்சுவை கதாபாத்திரங்களுக்குள்ளேயே எதிர்மறையான சாயல்களையும் சிறப்பாக வெளிப்படுத்தி, அதே நேரத்தில் ரசிகர்களை சிரிக்க வைத்த அவர்களின் திறமையை மிகவும் ரசிப்பதாகக் கூறுகிறார்.

வேலம்மாள் பள்ளியின் முன்னாள் மாணவரான அப்துல் லீ, பி.இ. பட்டம் பெற்றவர். இதுவரை சுமார் 35க்கும் மேற்பட்ட திரைப்படங்களில் நடித்துள்ளார். 'மொத ராத்திரி' திரைப் படத்தைப் பார்த்த நடிகர் சூரி, "திரையில் உங்களைப் பார்த்த போது என் மாமா நியாபகம் வந்தது" என்றார். நடிகர் சூரியின் இந்த பாராட்டு தனக்கு ரொம்பவே ஸ்பெஷல் என்கிறார் அப்துல் லீ.

சமீபத்தில் வெளியான 'ஜி.டி.என்.', 'கட்டா குஸ்தி 2' திரைப்படங்கள் மற்றும் 'ஹார்ட் பீட்', 'லோக்கல் டைம்ஸ்' உள்ளிட்ட இணையத் தொடர்களிலும் நடித் துள்ளார். 'மொத ராத்திரி' திரைப்படத்தில் நடிக்க வாய்ப்பளித்து, தன் மீது நம்பிக்கை வைத்த மைத்ரி மூவி மேக்கர்ஸ் நிறுவனத்தின் தயாரிப்பாளர்களுக்கும், இயக்குநர் ராஜா கருப்பு சாமிக்கும் அப்துல் லீ தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித் துள்ளார்.

மேலும், கதா நாயகன் ரிவகாந்துக்கும் தனக்கும் 13 ஆண்டுகளுக்கும் மேலான நட்பு உள்ளது என்றும், இந்தப் படத்தில் அவர் அளித்த ஆதரவும் தனக்கு மறக்க முடியாததாக அமைந்தது என்கிறார்.

'மொத ராத்திரி' திரைப் படத்தின் மூலம் தனது திரைப்பயணத்தை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லும் அப்துல் லீ, நகைச்சுவை, குணச்சித்திர மற்றும் எதிர்மறை கதாபாத்திரங்கள் என தொடர்ந்து நடிக்க விரும்புவதாக தெரிவித்துள்ளார்.

# எல்லைகள் பாதுகாக்கப்படுவதில் தான் ஒரு நாட்டின் பாதுகாப்பே அடங்கியுள்ளது - அமித் ஷா பேச்சு



சென்னை 22, ஆகஸ்ட் 2026: பிஎஸ்எஃப் -க்கு நிலம் ஒதுக்குமாறு மேற்குவங்கத்தின் முன்னாள் முதல்வர் மம்தா பானர்ஜியிடம் நாங்கள் இடைவிடாது கோரிக்கை விடுத்தோம். ஆனால் அவர் பதவியிலிருந்து விலகும் வரை அதைச் செய்யவில்லை என ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா பேசியுள்ளார்.

நாங்கள் நிலம் கேட்பது பிஎஸ்எஃப்-க்காகவே தவிர பாஜக-வுக்காக அல்ல என்பதை அவருக்கு விளக்குவதற்காக நான் ஒருமுறை அவரது அலுவலகத்திற்கே நேரில் சென்றிருந்ததாகவும் உள்துறை அமைச்சர் அமித் ஷா கூறினார். மேற்குவங்கம் மாநிலம் சிலிகுரியில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அமித்ஷா. எல்லைகள் பாதுகாக்கப் படுவதில் தான் ஒரு நாட்டின் பாதுகாப்பு அடங்கியுள்ளது. இதை உணர்ந்து தான் ஒன்றிய அரசு சார்பில் பலமுறை கோரிக்கை விடுத்தும், இந்தியா-வங்காளதேச எல்லைக்கு வேலி அமைப்பதற்குத் தேவையான நிலத்தை முந்தைய முதல்வர் மம்தா இறுதி வரை வழங்கவில்லை.

எல்லைப் பாதுகாப்பை வலுப்படுத்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக ஒன்றிய அரசு கேட்ட 1,129 ஏக்கர் நிலம் தற்போதைய பாஜக முதல்வர் சுவேந்து அதிகாரி தலைமையிலான அரசு அமைந்த பின்னரே கிடைத்து உள்ளது என்றார்.

ஏனென்றால் ஊடுருவல் நிற்கும் வரை மேற்கு வங்கமோ அல்லது இந்தியாவோ பாதுகாப்பாக இருக்காது என்பதை தற்போதைய மேற்கு வங்க முதல்வர் நன்கு உணர்ந்துள்ளார்."

# பணி நிரந்தரம் கோரி பகுதிநேர ஆசிரியர்கள் தமிழக அரசுக்கு மனு: பள்ளிக்கல்வித்துறை மானியக் கோரிக்கையில் அறிவிப்பு வெளியாகுமா? 11,773 ஆசிரியர்கள் எதிர்பார்ப்பு

சென்னை 22, ஆகஸ்ட் 2026: தமிழ்நாடு பகுதிநேர ஆசிரியர்கள் கூட்டமைப்பு மாநில ஒருங்கிணைப்பாளர் செந்தில்குமார் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: பள்ளிக்கல்வித் துறையில் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டத்தின் கீழ் பகுதிநேர ஆசிரியர்களாக 3,843 உடற்கல்வி, 3,721 ஓவியம், 2,033 கணினி அறிவியல், 1,584 தையல், 329 இசை, 22 தோட்டக் கலை, 49 கட்டடக் கலை, 192 வாழ்க்கைக் கல்வி என 8 பாடப் பிரிவுகளில் பணியாற்றும் 11,773 பகுதிநேர ஆசிரியர்களையும் பணி நிரந்தரம் செய்ய வேண்டும். பணி நிரந்தரம் கிடைக்காததால் சுமார் 5 ஆயிரம் ஆசிரியர் பணியிடங்கள் மரணம் மற்றும் பணி ஓய்வு உள்ளிட்ட காரணங்களால் காலியாகியுள்ளன. இதனால் அந்த ஆசிரியர்களின் குடும்பங்கள் பரிதவித்து வருகின்றன. பணி நிரந்தரத்திற்காக காத்திருக்கும் 11,773 ஆசிரியர்களில் பலர் 50 வயதை கடந்துள்ளனர். ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் ஓய்வு வயதை நெருங்கியுள்ளனர்.

வருங்கால வைப்பு நிதி, மருத்துவ காப்பீடு, பணியின்போது ஆசிரியர் உயிரிழந்தால் குடும்பத்துக்கு நிவாரணம், பணி ஓய்வுக்கான பணிக்கொடை, குடும்ப ஓய்வூதியம், போனஸ் உள்ளிட்ட எந்தவித பணப்பலன்களும் இல்லாமல் மிகவும் குறைந்த தொகுப்பூதியத்தில் பணியாற்றுவதால் பகுதிநேர ஆசிரியர் குடும்பங்களின் வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, மனிதாபிமான அடிப்படையிலும், தவெக தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றும் வகையிலும் பகுதிநேர ஆசிரியர்களுக்கு காலமுறை சம்பளம் மற்றும் பணி நிரந்தரம் வழங்க வேண்டும். மேலும், பகுதிநேர தொழிற்கல்வி ஆசிரியர்கள், உடற்கல்வி, கணினி அறிவியல், ஓவியம், தையல், இசை உள்ளிட்ட பாடங்களில் தொகுப்பூதியத்தில் பணியாற்றிய சிறப்பாசிரியர்கள், அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ் 2011-12-ம் ஆண்டில் நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள், விடுதிகளில் பகுதிநேர துப்புரவு பணியாளர்கள், வருவாய்த்துறையில் பகுதிநேரமாக பணியாற்றிய மணியக்காரர், முன்சீப், கர்ணம், கிராம்சை, தலையாரி, வெட்டியான், சிர்க்கட்டி உள்ளிட்ட பணியாளர்கள் மற்றும் ஊரக வளர்ச்சித்துறையில் பணியாற்றிய எழுத்தர்கள் ஆகியோர் காலமுறை சம்பளத்தில் பணி நிரந்தரம் செய்யப்பட்ட முன்மாதிரிகளை அரசு பின்பற்ற வேண்டும். பள்ளிக்கல்வித்துறை மானியக் கோரிக்கையின்போது பகுதிநேர ஆசிரியர்களுக்கான பணி நிரந்தர அறிவிப்பு வெளியாகும் என்ற எதிர்பார்ப்பு தமிழகம் முழுவதும் நிலவி வருகிறது.

எனவே, முதல்வர் 93-வது தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றி 11,773 பகுதிநேர ஆசிரியர்களின் நீண்டகால கோரிக்கைக்கு தீர்வு காண வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

# பழம்பெரும் நடிகை சௌகார் ஜானகியின் மறைவுச் செய்தி அறிந்து மிகுந்த வேதனை அடைந்தேன்: முதல்வர் விஜய்

சென்னை 22, ஆகஸ்ட் 2026: நடிகை சௌகார் ஜானகி மறைவுக்கு முதல்வர் விஜய் இரங்கல் தெரிவித் துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்; பழம்பெரும் திரைப்பட நடிகையும், தனது தனித்துவமான நடிப்பால் பல தலைமுறை ரசிகர்களின் மனதில் நீங்கா இடம் பிடித்தவருமான திருமதி சௌகார் ஜானகி அவர்கள் உடல்நலக்குறைவால் காலமானார் என்ற செய்தியை அறிந்து மிகுந்த அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தேன்.

திரைத்துறையில் 70 ஆண்டுகளுக்கும் மேலாகப் பயணித்து, எண்ணற்ற கதாபாத்திரங்களுக்கு உயிரூட்டிய அவரது கலைப் பணி என்றும் போற்றத்தக்கது. தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி போன்ற பல்வேறு மொழிப் படங்களில் நடித்து சாதனை படைத்துள்ளதோடு, பத்மஶ்ரீ விருது, கலைமாமணி விருது, நந்தி விருது உள்ளிட்ட பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ள திருமதி சௌகார் ஜானகி அவர்களின் மறைவு திரையுலகத்திற்கு பேரிழப்பாகும்.

திருமதி சௌகார் ஜானகி அவர்களை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும், திரைத்துறையினருக்கும் ரசிகர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது ஆன்மா இறைவன் திருவடிகளில் இளைப்பாற பிரார்த்திக்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

# ஆன்ஷ்வா புரொடக்ஷன்ஸ் தயாரிப்பில் பிரபு ஏகாம்பரம் இயக்கி நடிக்கும் 'மிடில் கிளாஸ் மாப்பிள்ளை' (எம்சிஎம்)

சென்னை, 22 ஆகஸ்ட் 2026: முன்னணி சர்வதேச ஐடி நிறுவனங்களில் பணியாற்றிய பிரபு ஏகாம்பரம், சினிமாவின் மீது கொண்டுள்ள காதல் காரணமாக 'மிடில் கிளாஸ் மாப்பிள்ளை' (எம்சிஎம்) எனும் திரைப்படத்தை எழுதி இயக்குவதோடு நாயகனாகவும் நடிக்கிறார்.

ஆன்ஷ்வா புரொடக்ஷன்ஸ் தயாரிப்பில் உருவாகி வரும் இந்த படத்தில் ஹரிபிரியா நாயகியாக நடிக்க, ஷீபா கிறிஸ்டி, அருள் டி. ஷங்கர் மற்றும் எலிசபெத் முக்கிய வேடங்களில் நடிக்கின்றனர்.

'மிடில் கிளாஸ் மாப்பிள்ளை' திரைப்படம் குறித்து பேசிய இயக்குநர் பிரபு ஏகாம்பரம், "90ஸ் கிட்ஸ் பரிதாபங்களை, குறிப்பாக பெண் கிடைப்பதில் அவர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களை இப்படம் சுவாரசியமாக சொல்லும். நடுத்தர குடும்பத்தின் வாழ்க்கையை திரையில் பிரதிபலிக்கும் வகையில் படத்தை உருவாக்கி வருகிறோம்," என்றார்.




'மிடில் கிளாஸ் மாப்பிள்ளை' திரைப் படத்திற்கு ரஷாந்த் ஆர்வின் இசையமைக்க, அபிஷேக் ஒளிப்பதிவை கையாளுகிறார். படத்தொகுப்பு: சூரிய முருகன்; பாடல்கள்: வி.ஜெ.பி. ரகுபதி; இயக்குநர் குழு: ஸ்ருஜித், நவீன், ஜெய்சங்கர்; மக்கள் தொடர்பு: நிகில் முருகன்; கிரியேட்டிவ் இயக்குநர்: ராப்ஸ் பிரசாத்; பப்ளிசிட்டி டிசைனர்: ரமேஷ் செந்தில், பிரவீன்; ஸ்டில்ஸ்: சந்தோஷ்.

ஆன்ஷ்வா புரொடக்ஷன்ஸ் தயாரிப்பில் பிரபு ஏகாம்பரம் இயக்கி நடிக்கும் 'மிடில் கிளாஸ் மாப்பிள்ளை படத்தின் படப்பிடிப்பு நிறைவடைந்து போஸ்ட் புரொடக்ஷன் பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன. திரைப்படத்தை விரைவில் வெளியிட படக்குழுவினர் திட்டமிட்டுள்ளனர்.

# வடகொரியா ஏவுகணை சோதனை

சென்னை, 22 ஆகஸ்ட் 2026: வடகொரியா தனது கிழக்கு கடற்கரையில் இருந்து அடையாளம் தெரியாத எறி பொருளை நேற்று ஏவியதாக தென்கொரியாவின் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. என்ன சோதனை நடத்தப்பட்டது என்பது குறித்த விவரங்கள் முழுமையாக தெரியவில்லை.

தென்கொரியாவுடனான ராணுவ பயிற்சிகளை குறைக்கும் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பின் முடிவை வடகொரியத் தலைவர் கிம் ஜாங் உன்னின் சகோதரி புறக்கணித்த ஒரு நாள் கழித்து இந்த சோதனையை வடகொரியா நடத்தியுள்ளது.



# பிரிக்ஸ் சுற்றுலா அமைச்சர்கள் கூட்டத்தில் ஜெய்ப்பூர் பிரகடனம் ஏற்பு

சென்னை 22, ஆகஸ்ட் 2026: பிரிக்ஸ் உறுப்பு நாடுகளிடையே சுற்றுலாத் துறையில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான ஒரு கட்டமைப்பை வழங்கும் பிரிக்ஸ் சுற்றுலா அமைச்சர்கள் அறிக்கை 2026 எனப்படும் ஜெய்ப்பூர் பிரகடனம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இதையடுத்து, இந்தியாவின் தலைமையில் நடைபெற்ற பிரிக்ஸ் சுற்றுலா அமைச்சர்கள் கூட்டம் ஜெய்ப்பூரில் நேற்று (21.08.2026) நிறைவடைந்தது.

இக்கூட்டத்திற்கு மத்திய சுற்றுலாத்துறை அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் தலைமை வகித்தார். இந்தக் கூட்டத்தில் ஒன்பது பிரிக்ஸ் உறுப்பு நாடுகள் பங்கேற்றன. அமைச்சர்கள் பங்கேற்பில், பிரேசிலின் சுற்றுலாத் துறை அமைச்சர் திரு குஸ்டாவோ கோஸ்டா பெலிசியாண்டோ, ஈரானின் சுற்றுலா அமைச்சர் திரு ரெசா சலேஹி அமிரி, தென்னாப்பிரிக்காவின் சுற்றுலாத்துறை அமைச்சர் திருமிகு பட்ரிசியா டி லில், ஐக்கிய அரபு சுற்றுலாத் துறை அமைச்சர் மேதகு அப்துல்லா பின் தௌக் அல் மர்ரி ஆகியோருடன், சீனா, எத்தியோப்பியா, இந்தோனேசியா, ரஷ்யா ஆகிய நாடுகளின் தூதுக்குழுத் தலைவர்களும் கலந்து கொண்டனர். இந்தியக் குழுவில், சுற்றுலாத் துறை அமைச்சகத்தின் செயலாளர் திரு புவனேஷ் குமார், சுற்றுலாத்துறை அமைச்சகத்தின் இணைச் செயலாளர் திரு ஹரிகிஷோர் உள்ளிட்ட பிற அதிகாரிகள் இடம்பெற்றிருந்தனர்.

ஜெய்ப்பூர் பிரகடனமானது, இந்தியாவின் தலைமைத்துவத்தின் போது பிரிக்ஸ் சுற்றுலாப் பணிக்குழுவின் மூலம் மேற்கொள்ளப்பட்ட பணிகளையும், முன்னுரிமை அம்சங்களையும் பிரதிபலிக்கிறது.

பிரிக்ஸ் சுற்றுலா அமைச்சர்களால் ஒருமித்த கருத்துடன் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரகடனம், சுற்றுலாவில் பொறுப்பான, பாதுகாப்பான டிஜிட்டல் தொழில்நுட்பங்களின் ஆற்றலை அங்கீகரிக்கிறது. அத்துடன் சுற்றுலாத் திட்டமிடல், இலக்கு மேலாண்மை, பார்வையாளர் சேவைகள், பன்மொழித் தொடர்பு, பயண வசதி ஆகியவற்றில் ஒத்துழைப்பை அதிகரிக்க வகை செய்கிறது.

பொருளாதார ரீதியாக செழிப்பான, சுற்றுச்சூழலுக்கு ஏற்ற, தொழில்நுட்ப ரீதியாக மேம்பட்ட, கலாச்சார ரீதியான ஒரு சுற்றுலாச் சூழல் அமைப்பை உருவாக்குவதில் இந்தியாவின் முயற்சிகளை அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் எடுத்துரைத்தார். சுற்றுலா, மக்களை ஒன்றிணைக்கிறது எனவும் அது சமூகங்களுக்கு வாய்ப்புகளை உருவாக்குகிறது என்றும், கலாச்சாரப் பரிமாற்றத்தை சாத்தியமாக்குகிறது, என்றும் அவர் குறிப்பிட்டார்.

# இருமுடி - தந்தை, மகள் பாசத்தையும் மனித மாற்றத்தையும் பேசும் உணர்வுப்பூர்வமான பயணம்

சென்னை 22, ஆகஸ்ட் 2026: சில திரைப்படங்கள் ரசிகர்களை வெறுமனே பொழுதுபோக்குவதற்காக உருவாகின்றன. ஆனால் சில திரைப்படங்கள் ரசிகர்களின் மனதைத் தொட்டு, அவர்களுடன் உணர்வுப்பூர்வமான தொடர்பை ஏற்படுத்துகின்றன. அந்த வகையில் இருமுடி திரைப்படம் ஒரு சிறப்பான படைப்பாக அமைந்துள்ளது.

இயக்குநர் சிவா நிர்வாணா இயக்கத்தில் உருவாகியுள்ள இப்படம் குடும்ப உறவுகள், தந்தை - மகள் பாசம், பக்தி, ஆக்ஷன் மற்றும் ஒரு மனிதனின் உள் மாற்றம் ஆகியவற்றை அழுத்தமாகப் பதிவு செய்கிறது.

ஒரு தந்தைக்கும் அவரது மகளுக்கும் இடையிலான ஆழமான பாசத்தை மையமாகக் கொண்டு கதை நகர்கிறது. ஆன்மிகப் பின்னணி கதாநாயகனின் வாழ்க்கை பயணத்திற்கு மேலும் ஒரு புதிய பரிமாணத்தை வழங்குகிறது. இதனால் இருமுடி ஒரு வழக்கமான கமர்ஷியல் திரைப்படமாக மட்டுமின்றி, உணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் குடும்பப் படமாகவும் உருவெடுக்கிறது.

ரவி தேஜா - வித்தியாசமான உணர்வுப்பூர்வமான நடிப்பு

இருமுடி திரைப்படத்தின் இதயம் மற்றும் ஆன்மா ரவி தேஜாதான்.

தனது துடிப்பான நடிப்பு, மாஸ் எனர்ஜி, நகைச்சுவை உணர்வு மற்றும் அசத்தலான திரை ஆளுமை மூலம் ரசிகர்களை தொடர்ந்து கவர்ந்து வரும் ரவி தேஜா, இந்தப் படத்தில் முற்றிலும் மாறுபட்ட கோணத்தில் காட்சியளிக்கிறார்.

பேபி நக்ஷத்ரா - படத்தின் உணர்வுப்பூர்வமான இதயம்

ரவி தேஜாவின் மகளாக நடித்துள்ள பேபி நக்ஷத்ரா சிறப்பான நடிப்பை வழங்கியுள்ளார்.

வெறும் சென்டிமென்டுக்காக இடம் பெறும் குழந்தை கதாபாத்திரமாக இல்லாமல், தந்தை - மகள் உறவே கதையின் முக்கியமான உணர்வுப்பூர்வமான அடித்தளமாக அமைந்துள்ளது.

ரவி தேஜா மற்றும் பேபி நக்ஷத்ரா இணைந்து வரும் காட்சிகள் படத்தின் மிகவும் நெகிழ்ச்சியான தருணங்களாக அமைந்துள்ளன.

மைத்ரி மூவி மேக்கர்ஸ் - சிறப்பான தயாரிப்பு மதிப்புகள்

நவீன் யெர்னேனி மற்றும் ஒய். ரவி சங்கர் தயாரிப்பில், மைத்ரி மூவி மேக்கர்ஸ் நிறுவனத்தின் தயாரிப்பாக உருவாகியுள்ள இருமுடி சிறப்பான தயாரிப்பு மதிப்புகளைக் கொண்டுள்ளது.

அனுபவம் வாய்ந்த தயாரிப்பு நிறுவனம், உணர்வுப்பூர்வமான கதைகளை கையாளும் சிவா நிர்வாணா, நட்சத்திர நடிகர் ரவி தேஜா மற்றும் இசையமைப்பாளர் ஜி.வி. பிரகாஷ் குமார் ஆகியோரின் கூட்டணி படத்திற்கு வலிமையான அடித்தளமாக அமைந்துள்ளது.

இப்படத்தை டி-சீரிஸ் பிலிம்ஸ் வழங்குகிறது.

இருமுடியின் சிறப்பு என்ன?

இருமுடியின் மிகப் பெரிய பலம் அதன் உணர்வுப்பூர்வமான அடித்தளம்.

ஒரு மனிதன் தன்னைத் தானே உணர்ந்து, ஒரு சிறந்த மனிதனாக மாறுவதற்கான பயணமே படத்தின் மையக்கரு.

அவரது மகளின் மீதான அன்பு, அந்த மாற்றத்திற்கான மிகப் பெரிய காரணியாக மாறுகிறது.



குடும்பம், தந்தை - மகள் பாசம், உணர்வு, பக்தி, ஆக்ஷன், மனமாற்றம் மற்றும் மனிதநேயம் ஆகிய அனைத்தையும் திரைப்படம் அழகாக இணைக்கிறது.

இதுவே இருமுடிக்கு தனித்துவமான அடையாளத்தை வழங்குகிறது.

இறுதித் தீர்ப்பு

இருமுடி உணர்வுப்பூர்வமான குடும்பக் கதையையும் ஆன்மிகப் பின்னணியையும் அழகாக இணைக்கும் திரைப்படமாக அமைந்துள்ளது.

ஒரு தந்தையின் மகள் மீதான அன்பையும், அவர் தன்னைத் தானே மாற்றிக்கொள்ளும் வாழ்க்கைப் பயணத்தையும் இணைத்திருப்பதே படத்தின் மிகப்பெரிய பலம்.

குடும்ப உணர்வுகள், பக்தி, ஆக்ஷன் மற்றும் கமர்ஷியல் அம்சங்களுடன் கூடிய திரைப்படங்களை விரும்பும் ரசிகர்களுக்கு இருமுடி நிச்சயம் திரையரங்கில் அனுபவிக்க வேண்டிய திரைப்படமாகும்.

இதயத்தைத் தொடும் உணர்வுப்பூர்வமான, ஆன்மிகத் தன்மை கொண்ட சக்திவாய்ந்த குடும்பப் படம்.

நடிகர்கள்

ரவி தேஜா - கதாநாயகன், பிரியா பவானி சங்கர் - கதாநாயகி, சாய் குமார் - முக்கிய கதாபாத்திரம், பேபி நக்ஷத்ரா - ரவி தேஜாவின் மகள், அஜய் கோஷ் - துணை கதாபாத்திரம், ரமேஷ் இந்திரா - துணை கதாபாத்திரம், ஸ்வாசிகா - துணை கதாபாத்திரம், மீசால லக்ஷ்மண், ராஜ்குமார் கசிரெட்டி, ரமண பார்கவ், கிஷோர் கஞ்சேரபாலெம், கார்த்திக் அடுசுமல்லி, மகேஷ்

தொழில்நுட்பக் குழு

இயக்கம்: சிவா நிர்வாணா, கதை, திரைக்கதை மற்றும் வசனம்: சிவா நிர்வாணா, தயாரிப்பாளர்கள்: நவீன் யெர்னேனி, ஒய். ரவி சங்கர், தயாரிப்பு நிறுவனம்: மைத்ரி மூவி மேக்கர்ஸ், வழங்குபவர்: டி-சீரிஸ் பிலிம்ஸ், இசையமைப்பு: ஜி.வி. பிரகாஷ் குமார், ஒளிப்பதிவு: விஷ்ணு சர்மா, படத்தொகுப்பு: ப்ரவீன் புடி, புரொடக்ஷன் டிசைனர்: சாஹி சுரேஷ், கலை இயக்கம்: பார்கவா நவுண்ட்லா, ஆக்ஷன் அமைப்பு: ராம்-லட்சுமண், ரியல் சதீஷ், நடன அமைப்பு: பாபா பாஸ்கர், வி.ஜே. சேகர், காஸ்ட்யூம் டிசைனர்: ராஜேஷ் கமரசு, மேக்கப்: ஐ. ஸ்ரீனிவாச ராஜு, விஎஃப்எக்ஸ்: நரேந்திர குமார் லோகிசா, ஒலி: சச்சின் சுதாகரன், ஹரிஹரன், புரோ: சுரேஷ் சந்திரா.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்